11. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும், வாழ்த்துகளையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அரசுக் கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு அனைத்து சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும், பேரவைச் செயலகத்திலிருக்கின்ற செயலாளர் மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும், பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி நண்பர்களுக்கும் என்னுடைய பணிவான நன்றியையும், வணக்கத்தையும் இந்த நல்ல நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பேரவை விதி 25(1)–ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்”

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

2018 ஜூலை 9] [பேரவைத் தலைவர்]

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–44 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

115. 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப (மின்னணு சேவை வினியோகம்) விதிகளை இயற்றியது குறித்து தகவல் தொழில்நுட்பவியல் (மின் ஆளுமை–*1*) துறையின் *2–12–2016* ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் *13*–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*2000* ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *21/2000*) *90*(*3*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

116. 14–12–2016 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் வெளியீட்டின், பாகம்–III, பிரிவு *1* (a)–ல் வெளியிடப்பட்ட தகவல் தொழில்நுட்பவியல் துறையின் SRO A–26/2016 ஆம் எண் அறிவிக்கைக்கு பிழைத்திருத்தங்கள் வெளியிட்டது குறித்து தகவல் தொழில்நுட்பவியல் (மின் ஆளுமை–*1*) துறையின் *11–7–2017* ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் *10*–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*2000* ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *21/2000*) *90*(*3*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

117. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு பீர் வடிப்பாலை விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (*3*) துறையின் *26–10–2017* ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் *31*–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1937* ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *10/1937*) *54*(*3*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

118. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீரா அல்லது பதநீர் விதிகளுக்கு பதிலாக *2017* ஆம் ஆண்டு தமிழ்நாடு நீரா விதிகளை இயற்றியது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (VIII) துறையின் *21–12–2017* ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் *41*–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1937* ஆம் ஆண்டு